2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதைப் பின்னர் எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நேற்றையதினம் நீங்கள் எழுப்பிய ஒரு பிரச்சினை பற்றி, இப்பொழுது ஒரு கிளாரிபிகேசன் கேட்க வேண்டும் என்றீர்கள். அதைக் கேட்கலாம்.

(ஆ) 27-4-1994-ஆம் நாளன்று ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அளிக்கப்பட்ட பதிலையொட்டி விளக்கம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நேரம் இல்லாத நேரத்தில் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து-வேலூர் சிறைச்சாலை, அதேபோல திருவண்ணாமலை கிளைச் சிறைச்சாலையினுடைய கைதிகள் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது தப்பி ஓடியது குறித்து நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அப்பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்தில் சொல்கிறபொழுது, அந்தக் கைதிகள் தப்பி ஓடியது தொடர்பாக அப்போது காவலில் இருந்த காவலர்கள் ஐவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். காவலர்கள் என்று சொல்கிறபொழுது சிறையிலிருந்து வெளியே, மருத்துவமனைக்குக் கைதிகளைக் கொண்டு வருகிறபொழுது காவல் துறையைச் சார்ந்தவர்கள்தான் அங்கே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சிறைக்கு உள்ளே இருக்கும்போதுதான் சிறையிலே இருக்கக்கூடிய வார்டர்கள், சிறைத் துறை அதிகாரிகள் அங்கே காவலில் இருக்கிறார்கள். நேற்று குறிப்பிடுகிறபொழுது காவல் துறையைச் சார்ந்த காவலர்கள்தான் அங்கே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நான் உணர்ந்தேன். ஆனால் இன்று சில பத்திரிகைகளைப் பார்க்கிறபொழுது அதிலே சிறைச்சாலைத் துறையைச் சார்ந்த காவலர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகச்

செய்தி வெளி வந்திருக்கிறது. அதிலே எது உண்மை என்பதை இம்மாமன்றத்திற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், வேலூர் மருத்துவமனையிலே 3 போலீஸ் அதிகாரிகள் காவலில் இருந்தார்கள். அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை பிரிசன்ஸ் ஸ்டாஃப்--சிறை அதிகாரிகள் இரண்டு பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, 3 போலீஸ் அதிகாரிகளும், இரண்டு சிறை அதிகாரிகளும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர்கள் திரு. இளம்வழுதி மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை-பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய எதிர்க் கட்சி வரிசையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி இரண்டாம் தடவையும் வெளியேற்றப்பட்ட பின்னால், தொடர்ந்து இந்த சட்டமன்றக் கூட்டம் முடியும் வரையிலே கலந்துகொள்ளக் கூடாது என்று தங்களுடைய தீர்ப்பை அளித்திருக்கிறீர்கள். அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு அவர்களும் இங்கே வெளியேற்றப்பட்டு அவர்களும் சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுமையும் கலந்துகொள்ளக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பளித்து இருக்கிறீர்கள். அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பீட்டர் அல்போன்ஸ்., இப்படி தொடர்ச்சியாக நடைபெறுகிற சட்டமன்றக் கூட்டத்தில்--காங்கிரஸ் கட்சியினுடைய இயக்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு